Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 85 of 2023**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.9**

Defence

Court

| | |
|---|---|
| Name | **டாக்டர் மகேஸ்வரி** |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 25th day of November 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 25th day of November 2025.**

**3 வது எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் தற்போது பண்ருட்டி அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் 18.08.2022 அன்று பண்ருட்டி அரசு மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணியில் இருந்த போது இரவு சுமார் 11.10 மணிக்கு கீழக்கொல்லை முருகன் கோவில் சேர்ந்த சந்திரனின் மகன் ஞானசெல்வம் என்பவரை அவருடைய மைத்துனர் ராஜ்குமார் என்பவர் அழைத்து வந்தார். அவர் ஞானசெல்வத்தை 3 தெரிந்த நபர்கள் அவருடைய வீட்டின் முன் இரும்பு கடப்பாறையால் சுமார் இரவு 9.30 மணிக்கு 18.08.2022 அன்று தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசேரித்த போது அவர் சுயநினைவுடன் இருந்தார்.

1. அவருக்கு கன்றியகாயம் 5x6 cm அளவில் இடது நெற்றியில் இருந்தது.

2. கிழிந்த காயம் 5x0.5 cm மீட்டர் இருந்தது . முதல் காயத்தின் மேல் இருந்ததது.

3. அவருக்கு இடது கண் பார்வை குறைவாக தெரிவதாக கூறினார் ஆகையால் கடலூர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டார். அவர் கடலூர் அரசு மருத்துவமனையில் எப்போது சேர்ந்தார் என்ற விவரம் மருத்துவமனையில் பராமரிக்கும் 108 ஆம்புலன்ஸ் பதிவேட்டில் பார்த்தால் தான் தெரியும். இந்த வழக்கில் காயச் சான்று எதுவும் கொண்டு வந்து போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **நான் வழங்கிய விபத்து பதிவேடு அதசாஆ 4 ஆகும்.** இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள். மேற்சொன்ன ஞானசெல்வத்திற்கு ஏற்பட்டுள்ள வெளிக்காயங்களின் நேரிடை தாக்கமாக உள்காயங்கள் உள்ளனவா என்பதை

ஸ்கேன் மற்றும் மேல்சிகிச்சையில் பார்த்தால் அந்த காயங்கள் இறப்பு ஏற்படுத்ததக்கூடியனவா என்று தெரிய வரும். அந்த வகையில் மேற்படி காயங்கள் ஞானசெல்வத்திற்கு இறப்பு ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு உண்டு.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

ஞானசெல்வம் இறந்த பின்பு தான் போலிசார் என்னை விசாரித்தார்கள். சுமார் 3 மாத காலத்திற்கு பிறகு என்னை விசாரித்தார்கள். நான் கடலூர் அரசு மருத்துவமணைக்கு ஞானசெல்வத்தை பரிந்துரை செய்து எந்த தேதி, எந்த மாதம் என்றால் அன்றே இரவு 11.30 மணியளவில் பரிந்துரை செய்து விட்டேன். நெஞ்சுப்பகுதியிலும், முதுகிலும் தாக்கப்பட்டதாகவோ, அதில் வலி இருப்பதாகவோ ஞானசெல்வம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மேல்சிகிச்சைக்காக ஞானசெல்வத்தை பரிந்துரை செய்ததாக அதசாஆ 4 விபத்து பதிவேட்டில் அவருடைய கண்ணுக்காக என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஞானசெல்வத்திற்கு ஏற்பட்டுள்ள வெளிக்காயங்களின் நேரிடை தாக்கமாக உள்காயங்கள் உள்ளனவா என்பதை ஸ்கேன் மற்றும் மேல்சிகிச்சையில் பார்த்தால் அந்த காயங்கள் இறப்பு ஏற்படுத்ததக்கூடியனவா என்று தெரிய வரும் என்றும் அந்த வகையில் மேற்படி காயங்கள் ஞானசெல்வத்திற்கு இறப்பு ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு உண்டு என்றும் போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

காயம் பட்ட ஞானசெல்வத்தின் தலையில் ஏற்பட்ட காயத்தினால் தலை மற்றும் கண்களில் இரத்தம் உறைந்தும் அதன் காரணமாக இறப்பு ஏற்பட்டதாக எனக்கு தெரிய வந்தது. ஞானசெல்வம் இடது கண் பார்வை குறைவாக இருப்பதாக என்னிடம் கூறினார் இந்த விவரத்தை நான் அதசாஆ 4 விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேன். இடது பக்க நெற்றியில் காயம் இருந்ததால் இரத்தம் உறைந்து அதன் காரணமாக கண் பார்வை குறைவு ஏற்பட்டிருக்கும் என நான் மேல்சிகிச்சைக்காக பரிந்துரை செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

வெளிப்படையான காயங்கள் எதுவும் ஞானசெல்வத்தின் கண்ணில் இல்லை என்றால் சரிதான்.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 85 of 2023**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.10**

Defence

Court

| | |
|---|---|
| Name | டாக்டர் மது வர்தனா |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 25th day of November 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 25th day of November 2025.**

**3 வது எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் தற்போது விழுப்புரம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சட்ட சார்ந்த மருத்துவ துறையில் முதுநிலை உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் அதே பணியில் இருந்த போது கடந்த 30.11.2022 அன்று காடாம்புலியர் வட்ட ஆய்வாளர் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் பேரில் முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய குற்ற எண் 364/2022 என்ற குற்ற வழக்கில் இறந்த நபர் ஞானசெல்வம் த.பெ. சந்திரன் 47 வயது ஆண் என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்குமாறு முதல்நிலை காவலர் 1986 திரு. ஜான் செம்ஸ் என்பவர் மூலம் பெற்றுக்கொண்டு அன்றைய தினமே பிற்பகல் 12.50 மணிக்கு மேற்படி பரிசோதனை தொடங்கினேன். மேற்படி காவலர் பிரேதத்தை அடையாளம் காட்ட அங்க மச்ச அடையாங்கள் சரிபார்க்கப்பட்டது. இறந்த நபர் வெளிந்த தேகத்துடனும் மிகக்குறைந்த போஷாக்கடனும் அவரது உடலில் பிணவிரைப்பு தன்மை இல்லாமலும் காணப்பட்டார். கண் மற்றும் வாய் முடிய நிலையிலும், உதடுகள் நீள நிறத்திலும், மூக்கில் நுரை நிறைந்த திரவம் வழிந்த நிலையில் காணப்பட்டது.

**உடலில் மீது காணப்பட்ட வெளிப்புறக்காயங்கள் பின்வருமாறு**

1. சுமார் 23 cm அளவிலான C வடிவிலான அறுவைசிகிச்சை செய்த பாதி ஆறிய நிலையில் உள்ள காயமானது இடது பக்க தலையில் பக்கவாட்டில் இருந்து இடதுபக்க தலையில் பின்புறம் வரை காணப்பட்டது.

2. ஒன்றுக்கும் மேற்பட்ட பல அளவுகளான Bed sores எனப்படும் நீண்ட நாட்களாக படுக்கையில் இருந்தால் இரத்தம் ஓட்டம் குறைவதால் ஏற்படும் காயங்கள் காணப்பட்டன அவைகள் பாதி ஆறிய நிலையிலும், அல்லது மேல் புறத்தில் தசைகள் அழுகியநிலையிலும் சீழுடனும் காணப்பட்டது. உட்புற பரிசோதனையில் போது தலையில் மூடித்தோளில் சுமார் 6x4x45 cm என்ற அளவிலான கன்றியமானது தலையின் பின்புறத்தில் வெளிர் மஞ்சள் நிறத்தில் காணப்பட்டது. மண்டையோடானது இடது பக்க பக்கவாட்டில் அறுவைசிகிச்சை மூலம் நீக்கப்பட்டு மற்ற மண்டையோடு பகுதிகளுடன் ஒட்டாமல் காணப்பட்டது. மண்டையோட்டின் அடிப்பகுதியில் மூளை உறை ஒட்டிய நிலையில் காணப்பட்டது. மூளையில் சுமார் 4x4cm அளவிலான ஒரு கட்டியானது இடது பக்க தலையில் பக்கவாட்டில் நடுப்பகுதியில் மஞ்சள் நிறத்திலும் இயல்பான தோற்றத்தில் இல்லாமலும் காணப்பட்டது. மண்டையோட்டின் அடிப்பகுதி இயல்பான நிலையில் காணப்பட்டது.

3. கழுத்தில் நாவடி மற்றும் குரல்வளஎலும்புகள், உணவுக்குழாய் மற்றும் மூச்சுக்குழாய் மற்றும் அதனை சுற்றியுள்ள தசைகள் மற்றும் இரத்தக்குழாய்கள் இயல்பான நிலையில் காணப்பட்டது.

4. மார்பில் சுமார் 300 மில்லி லிட்டர் அளவிலான மஞ்சள் நிற திரவம் நெஞ்சுக்கூட்டில் காணப்பட்டது. மார்ப்புஎலும்புகள் இயல்பான நிலையில் காணப்பட்டது. இரண்டு நுரையிரல்களும் நெஞ்சுக்கூட்டின் பின்பகுதியில் ஒட்டிய வண்ணம் காணப்பட்டது. அதன் வெற்று தோற்றத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தூவாரங்கள் சீழ் நிறைந்து காணப்பட்டது. இருதயம் மற்றும் அதனை சுற்றியுள்ள தாமனிகள் இயல்பான நிலையில் காணப்பட்டது.

5. வயிற்றில் சுமார் 200 மில்லிலிட்டர் அளவிலான மஞ்சள் நிற திரவம் காணப்பட்டது.

6. இறைப்பையில் சுமார் 10 மில்லிலிட்டர் அளவில் ஆரஞ்சு நிற திரவம் பிறத்தேக வாடை எதுவும் இல்லாமலும் காணப்பட்டது.

7. மற்ற உடல் உள்ளுறுப்புகள் இயல்பான நிலையிலும், வெற்று தோற்றத்தில் வெளிர் நிலையில் காணப்பட்டது. மேற்படி பிரேத பரிசோதனை பிற்பகல் 2.10 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த பரிசோதனையானது வீடியோ பதிவு செய்யப்பட்டு முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய துணை ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. உடல் உள்ளுறுப்புகள் ரசாயண பரிசோதனைக்காகவும், திசுவியல் பரிசோதனைக்காகவும் அனுப்பி வைக்கப்பட்டது. பிரேத பரிசோதனைக்கு முன்பாக சுமார் 36 ல் இருந்து 48 நேரத்திற்கு முன்பு மேற்படி நபர் இறந்திருக்கக்கூடும். ரசாயண பரிசோதனை அறிக்கை பெறப்பட்டது அதன் அடிப்படையில் நான் வழங்கிய இறுதி கருத்துரை மேற்படி நபர் உடலில் ஏற்பட்ட காயங்களின் விளைவுகளால் இறந்திருக்கக்கூடும் என்று கருத்துரை வழங்கினேன். **நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை இறுதி கருத்துரை மற்றும் Viscera மற்றும் Autopsy அறிக்கையுடன் சேர்த்து அதசாஆ 5 வரிசை.** எனது இறுதி கருத்துரையை மேற்படி ஞானசெல்வத்திற்கு பண்ருட்டி அரசு மருத்துவமனை, கடலூர் தலைமை மருத்துவமனை மற்றும் ஜிப்மர் மருத்துவமனையில் அளிக்கப்பட்ட சிகிச்சைக்குரிய ஆவணங்களை பார்த்தும் அளித்தேன். ( மேற்படி மருத்துவமனைகளில் ஞானசெல்வத்திற்கு வழங்கப்பட்ட சிகிச்சைக்குரிய ஆவணங்கள் எதுவும் இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்யப்படவில்லை).

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

பின்பக்க தலையில் நடுப்பக்கத்தில் உள்ள இரத்தக்கட்டு மஞ்சள் நிறமாக இருப்பது 7 ல் இருந்து 12 நாட்களுக்குள் ஏற்பட்ட காயத்தின் வயது என்றால் சில நேரங்களில் நீண்ட நாட்களுக்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் மஞ்சள் நிறத்தில் காணப்படலாம். மேலும் இந்த வகை நிற மாற்றங்கள் இறந்த நபரின் உடல்நிலை , போஷாக்கு ஆகிய பல அம்சங்களால் மாறுப்பட வாய்ப்பு உள்ளது.

14 நாட்களுக்கு மேலே ஆகிவிட்டால் அந்த மஞ்சள் நிற மாறி தோலின் நிறமாக மாறி அதை Variegated colour என நான் குறிப்பிட்டு இருப்பேன் என்றால் நிற மாற்றங்கள் இறந்த நபரின் உடல்நிலை , போஷாக்கு ஆகிய பல அம்சங்களால் மாறுப்பட வாய்ப்பு உள்ளது.

**நீதிமன்ற கேள்வி:-**

மேற்படி நபருக்கு நடைபெற்றுள்ள அறுவைசிகிச்சை விவரங்கள் என்ன?

**பதில்:-**

ஜிப்மர் மருத்துவமனையில் Left parietal craniotomy என்ற அறுவைசிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*
*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*